தஞ்சாவூர் மாவட்டம் அரணமனை வளாக சரஸ்வதி மகால் நூலகத்தில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மற்றும் சரஸ்வதி மகால் நூலக தலைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மேற்கொள்ள வேண்டிய வளர்ச்சிப் பணிகள் குறித்து நேற்று முன்தினம் (01.06.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சரஸ்வதி மகால் நூலக இயக்குநர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம், வருவாய் கோட்டாட்சியர் திருமதி இலக்கியா, சரஸ்வதி மகால் நூலக நிர்வாக அலுவலர் எஸ். மார்ஸ் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

இந்தோனேசியாவில் நடைபெற்ற சர்வதேச ஸ்கேட்டிங் போட்டியில் முதல் முறையாக கலந்து கொண்டு 1000 மீட்டர் பிரிவில் தங்கம், 500 மீட்டர் பிரிவில் வெள்ளி வென்ற மாணவி செல்வி கன்யாவிற்கும், இதே போட்டியில் 8 வயதுக்குட்பட்ட பிரிவில் 1000 மீட்டர் மற்றும் 500 மீட்டர் பிரிவில் வெள்ளி பதக்கங்கள் வென்ற செல்வி மேகமித்ராவுக்கும், கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., பரிசளித்து பாராட்டுத் தெரிவித்தார்.

முத்தமிழறிஞர் செம்மொழி நாயகர் கலைஞர் பிறந்தநாள் விழா!

திருப்பூர் கிழக்கு - திருப்பூர் தெற்கு மாவட்டம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாடுவீர்!

மாவட்டப் பொறுப்பாளர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன் - மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் அறிக்கை!

திருப்பூர், ஜூன் 3 -

முத்தமிழ் அறிஞர் செம்மொழி நாயகர் கலைஞர் அவர்களது பிறந்தநாள் விழா இன்று (ஜூன் 3 ம் தேதி) திருப்பூர் கிழக்கு, திருப்பூர் தெற்கு மாவட்டம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும் என கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டல தலைவர் இல.பத்மநாபன் அறிக்கை விடுத்துள்ளனர்.

அவர்களது அறிக்கை வருமாறு : தங்கச் சூரியன் உதிக்கும் வங்க கடலோரத்தில் துயில் கொண்டிருக்கும் எங்கள் அன்பு கலைஞரே,

"என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே" எனும் காந்தக் குரலுக்கு சொந்தமான எங்கள் முத்தமிழ் அறிஞரே, பெரியாரின் எண்ணங்களை அண்ணாவின் வழியில் நடைமுறை படுத்தி பலலட்சியங்களை சாதித்த பேரறிஞரின் தம்பியே, சட்டங்கள் பல இயற்றி, திட்டங்கள் பல தீட்டி தமிழ் நாட்டை உலகறிய செய்த எங்கள் அன்பு இதயமே,

இந்திய ஜனநாயகக் காவலராகத் திகழ்ந்த மூத்த அரசியல் தலைவர், இலக்கியம் கவிதை இதழியல் நாடகம் திரைப்படம் எனத் தொட்ட துறைகள் அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்த பன்முகத்திறன் கொண்ட படைப்பாளர், உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்த நம் 'தமிழினத் தலைவர்' கலைஞர்,

அய்யன் திருவள்ளுவருக்கு தேர் வைத்தால் போதாது என்று வானுயர சிலை வைத்து உலகத்தையே அண்ணார்ந்து பார்க்க வைத்த திருக்குறளுக்கு உரை எழுதிய தங்க பேனாவே உங்கள் பிறந்த நாளில் வணங்குகின்றோம்.

இந்திய நாட்டிலேயே சிறந்த முதலமைச்சராக நான்காண்டுகள் சிறப்பான சாதனைகளை புரிந்து ஐந்தாவது ஆண்டில் வெற்றி நடை போட்டு கொண்டிருக்கும் கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர், இளம் தலைவர் ஆகியோரின் கரங்களை வலுப்படுத்துவோம். கழக அரசின் சாதனை திட்டங்களை தமிழக மக்களிடத்தில் சென்றடையும் வகையில் பிரச்சாரம் செய்து "வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு" தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட மாடல் நாயகர், தளபதி அவர்களின் சபதத்தை நிறைவேற்றும் வகையில் கழக தோழர்கள் இரவு, பகல் பாராது அயராது உழைத்து தமிழகத்தில் 2026 ல் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் 7 வது முறையாக கழக ஆட்சி அமைந்து, கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட மாடல் நாயகர் தளபதி அவர்கள் இரண்டாவது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஆட்சியில் அமைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளில் சபதம் ஏற்போம்.

எனவே மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை கழக செயலாளர்கள், BLA 2, BLC அனைவரும் அவர்கள் சார்ந்த பகுதிகளில் கழக கொடி ஏற்றி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கியும், நலத்திட்ட உதவிகளை வழங்கியும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள், எழுது பொருட்கள் வழங்கியும் சிறப்பாக கொண்டாப்பட வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழாவை

சேலம் கிழக்கு மாவட்டம் முழுவதும் நல உதவிகள் வழங்கி சிறப்பாகக் கொண்டாடுவீர்!

மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிவிப்பு!

சேலம், ஜூன் 3 -

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா சேலம் கிழக்கு மாவட்ட முழுவதும் கழக இருவண்ணக் கொடியேற்றி இனிப்புகள் வழங்கி பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி எழுச்சியுடன் கொண்டாட வேண்டுமென சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் வேண்டுகோள் விடுத்துள் ளார் அதன் விபரம் வருமாறு;

நம் நெஞ்சமெல்லாம் நிறைந்த கூடிய உலகத்தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா ஜூன் 3 ஆம் தேதி முதல் கொண்டாடப்படுகிறது. எனவே தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் தின விழா சிறப்பாக நலத் திட்ட உதவிகள் வழங்கி கொண்டாட வேண்டுமென கிழக்கு மாவட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அதனைச் செயல்படுத்தும் வகையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள்விழா எல்லோரும் போற்றும் வகையிலும் பயன்பெறும் வகையிலும் சேலம் கிழக்கு மாவட்டத்தில் உள்ள நகர்ப்புற ,கிராமப்புற பகுதிகளில் பட்டி தொட்டிகளிலெல்லாம் கழக இரு வண்ண கொடியை ஏற்றி இனிப்புகள் வழங்கி ஏழை எளிய மக்களுக்கும் , மாணவ மாணவிகளுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும், தொழிலாளர்களுக்கும், நலிந்த கழகத்தினர் என அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை தேடி சென்று வழங்கி கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா பெருமை சேர்க்க வேண்டும். அதுசமயம் மாவட்ட நிர்வாகிகள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ,கிளைக் கழகச் செயலாளர்கள், வார்டு செயலாளர்கள், மாவட்ட ,ஒன்றிய, நகர, பேரூர் , செயலாளர்கள் இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, விவசாய அணி, பொறியாளரணி, வழக்கறிஞர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள்,உள்ளாட்சி பிரதிநிதிகள், நகர் மன்ற தலைவர்கள், எனவே கலைஞர் வழியில் ஆட்சி நடத்தி வரும்தளபதியாரின்நான்கு ஆண்டு நிறைவடைந்த நிலையில் நான்கு ஆண்டு சாதனைகளை பொது மக்களிடம் எடுத்துரைக்க வேண்டும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை பட்டி தொட்டி எங்கும் சீரோடும் சிறப்போடும் நலத் திட்ட உதவிகள் வழங்கி கொண்டாட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் தமது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாள் விழா - செம்மொழி நாள் விழா !

திருப்பூர் மத்திய மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி மிகச் சிறப்பாகக் கொண்டாடுவீர்!

மாவட்டச் செயலாளர் – க.செல்வராஜ் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருப்பூர், ஜூன் 3 -

இந்தியாவிற்கே வழிகாட்டிடும் திராவிட மாடல் அரசின் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழாவை செம்மொழி நாள் விழாவாக திருப்பூர் மத்திய மாவட்டம் முழுவதும் நலத் திட்ட உதவிகள் வழங்கி மிகச் சிறப்பாக கொண்டாடிட வேண்டுமென மாவட்ட கழகச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு : தமிழே உயிராக, தமிழினமே உணர்வாக, தமிழர் நலனும் தமிழ்நாட்டின் வளர்ச்சியுமே வாழ்நாள் செயல் திட்டமாகக் கொண்ட ஓய்வில்லாச் சூரியன்; தனது 94 ஆண்டு ஆயுட்காலத்தில் 80 ஆண்டு கால பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரர், ஒரு நூற்றாண்டுகால திராவிட இயக்க வரலாற்றில் முக்கால் நூற்றாண்டு காலப் பங்களிப்பாளர், அரை நூற்றாண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருந்து தமிழ்நாட்டு அரசியலின் அச்சாணியாக செயல்பட்டவர், களம் கண்ட 13 தேர்தல்களிலும் வெற்றி கண்ட சாதனையாளர், ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று மாநிலத்தின் ஒவ்வொரு குடு ம்பத்திற்கும்நலன்விளைவிக்கும் திட்டங்களை வழங்கியவர், இந்திய ஜனநாயகக் காவலராகத் திகழ்ந்த மூத்த அரசியல் தலைவர், இலக்கியம் கவிதை இதழியல் நாடகம் திரைப்படம் எனத் தொட்ட துறைகள் அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்த பன்முகத்திறன் கொண்ட படைப்பாளர், உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்த நம் 'தமிழினத் தலைவர்' கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழாவான ஜூன் 3ம் தேதி அன்று திருப்பூர் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழகம், கிளைக் கழகம், ஊராட்சி கழகங்கள் என மாவட்டம் முழுவதும் அனைத்து இடங்களிலும் கலைஞரின் திருவுரு வப்படம் அலங்கரித்து வைக்கப்பட்டு மலர் தூவி மரியாதை செலுத்தி, கழக கொள்கை பாடல்களை ஒலிபரப்பச் செய்து, பொது மக்களுக்கு இனிப்புக்கள் வழங்கியும், பல்வேறு முதியோர் இல்லங்கள், ஆதரவற்றோர் இல்லங்கள், பார்வையற்றோர் இல்லங்கள், மாணவர் விடுதிகள், கருணை இல்லங்கள், பெண்கள் காப்பகங்கள், மனநலகாப்பகம், பார்வையற்றோர் இல்லம் போன்ற இடங்களில் வாழ்கின்றவர்களுக்கு காலை, மதியம், இரவு உணவுகள் வழங்கியும், மாநகராட்சி, நகராட்சி, மற்றும் ஊராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு, புத்தாடை மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கியும், இலவச கண் மருத்துவ சிகிச்சை முகாம், இரத்ததான முகாம்கள் நடத்தியும் ஜூன் மாதம் முழுவதும் கலைஞர் பிறந்தநாள் விழா நினைவு பேச்சுப் போட்டிகள், கட்டுரை, கவிதை போட்டி கள், கபாடி, கிரிக்கெட் போட்டிகள் போன்று பல்வேறு விளையாட்டுப் போட்டிகளையும் சிறப்பாக நடத்திட வேண்டுமாய் அனைவரையும் கேட்டுக்கொள்கி றேன்.

அதுசமயம் அன்று நடைபெறுகின்ற அனைத்து நிகழ்ச்சிகளிலும் கழக மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினரகள், ஊராட்சி ஒன்றிய, நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள் உறுப்பினர்கள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட, மாநகர தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள், அனைவரும் பொதுமக்களை திரளாக பங்கேற்க செய்து நிகழ்ச்சிகளை சிறப்பாக கொண்டாடிட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என்று அவரது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் 102 வது பிறந்தநாள் செம்மொழி நாள் விழா !

மயிலாடுதுறை மாவட்டத்தில் ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

மயிலாடுதுறை, ஜூன் 3 -

உலகெங்கும் வாழும் தமிழர்களின் காவல் அரணாக விளங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்நாளை செம்மொழி நாளாக சிறப்பாக கொண்டாடிட வேண்டுமென மயிலாடுதுறை மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்ட கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் எம். எல். ஏ. ।வேண்டுகோள் விடுத்து அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு : தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் வழியில் முத்தமிழறிஞர் கலைஞர் தம் வாழ்நாளெல்லாம் கடுமையாக உழைத்து, தமிழர் வாழ்வில் வளமும், வலிமையும் சேர்க்கும் திட்டங்கள் பலவற்றை செயல்படுத்தி கல்வி, அறிவியல், தொழிற்நுட்பம், அரசியல், பொருளாதார, சமுதாய நிலைகள் அனைத்திலும் தலை சிறந்த மாநிலம் தமிழ்நாடு எனும் பெருமையை நமக்கு தேடித் தந்தார். உலகெங்கும் வாழும் தமிழர்களின் காவல் அரணாக, நின்ற தேர்தல் 13 முறையும் வெற்றி, ஐந்து முறை தமிழ்நாடு முதலமைச்சர், கலை, இலக்கியம், எழுத்து, பத்திரிக்கையாளர் என அனைத்து துறையிலும் முன்னோடியாக விளங்கிய தலைவர் கலைஞர் விளங்கிய நவீன தமிழகத்தின் சிற்பி முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் சிலைக்கும். கலைஞர் சிலை இல்லாத இடங்களில் கலைஞர் திரு உருவப் படத்தை வைத்து மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட உள்ளது. இந் நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், சட்டமன்ற முன்னாள் , இந்நாள் உறுப்பினர்கள் தலைமை செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர பேரூர் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடி கள், கிளை, வார்டு கழகநிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்துக்கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

மேலும் கிளை, வார்டுகளில் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து, கழகத்தின் இருவர்ண கொடியேற்றிட வேண்டும் என்றும். இதற்கான ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் செய்திடுவதோடு ஜூன் மாதம் முழுவதும் ஏழை - எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும், ஆதரவற்றோர் இல்லம், முதியோர் இல்லம், அரசு மருத்துவமணைகளில் நலத் திட்ட உதவிகளையும், பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு பேனா உள்ளிட்ட எழுது பொருட்களை வழங்கியும்,ரத்ததான முகாம், மருத்துவ முகாம், கலைஞர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டங்கள், தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள் நடத்தியும், மரக்கன்றுகள் நட்டும், வழங்கியும் கலைஞர் பிறந்தநாள் விழாவை சிறப்பாக எழுச்சியுடன் கொண்டாடிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு தனது அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. கூறியுள்ளார்.

திருச்சி மாநகர முன்னாள் செயலாளர்

கே.கே.எம்.தங்கராஜா மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 3 -

திருச்சி மாநகரக் கழக முன்னாள் செயலாளர் கே.கே.எம்.தங்கராஜா அவர்கள் மறைவு செய்தியறிந்ததும் கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

திருச்சி மாநகரக் கழக முன்னாள் செயலாளரும், ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டக் கழக முன்னாள் பொருளாளருமான திரு. கே.கே.எம்.தங்கராஜா அவர்கள் மறைந்த செய்தி அறிந்து வேதனையடைந்தேன்.

மலைக்கோட்டை மாநகரில் கழகம் வளர்த்து, மக்களின் அன்பைப் பெற்ற திரு. தங்கராஜா அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் திருச்சி மாவட்ட உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

ஒருங்கிணைந்த திருச்சி மாநகர முன்னாள் செயலாளர்

கே.கே.எம். தங்கராஜா மறைவு!

கழக நிர்வாகிகள் – தோழர்கள் அஞ்சலி!

திருச்சி, ஜூன் 3 -

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒருங்கிணைந்த திருச்சி நகர கழக செயலாளர், மாவட்ட ஆவின் சேர்மன், தலைமை செயற்குழு உறுப்பினர் போன்ற பதவிகளை வகித்தவர் கே.கே.எம்.தங்கராஜா. இவர் நேற்று முன்தினம் (01.6.2025) பகர் திருச்சியில் காலமானார்.

திருச்சியில் தி.மு.க.வை வளர்த்த முக்கிய நிர்வா கிகளில் கே.கே.எம். தங்கராஜா முக்கியமானவர். கலைஞர் 1996 இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்த போது இவருக்கு திருச்சி மாவட்ட ஆவின் சேர்மன் பதவி வழங்கப்பட்டது. இந்த பொறுப்பில் 1996 முதல் 2001 வரை செயல்பட்டார்.

இவ்வாறு பல்வேறு பொறுப்புகளில் சிறப்பாக செயல்பட்ட கே.கே.எம். தங்கராஜா நேற்று (01.06.2025) ஞாயிற்றுக்கிழமை பகல் காலமானார். அவரது உடலுக்கு கட்சி நிர்வாகி கள், தொண்டர்கள், உறவினர்கள், நண்பர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அவரது இறுதி ஊர்வலம் நேற்று (ஜூன் 2) மாலை 3 மணி அளவில் திருச்சி, பெரிய மிளகு பாறையில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர்.சிவலிங்கம் ஆலோசனைப்படி தலைவாசல் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் கழக அரசின் நான்காண்டு சாதனைகள் விளக்கம் புத்தகத்தை மத்திய ஒன்றிய தி.மு.க. செயலாளர் சாத்தப்பாடி மணி (எ) பழனிச்சாமி தலைமையில் வீடு வீடாகச் சென்று பொதுமக்களிடம் வழங்கினார். இதில் முன்னாள் எம்.எல்.ஏ. குணசேகரன், முன்னாள் ஒன்றிய செயலாளர் வி.சி.முருகேசன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சேகர் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.